Flexi Investor				
கணக்கின் தன்மை	**வாடிக்கையாளருக்கான நன்மைகள்**	**ஆரம்ப வைப்புகளும் கட்டணங்களும்**	**தகுதி**	**முக்கியமான விதிகளும் நிபந்தனைகளும்**
வாடிக்கையாளர் தாம் விரும்பும் வகையில் இலக்குகளை அடையும் வகையில் உருவாக்கப்பட்ட இலக்கு மையக் கணக்கு	உங்களுடைய இலக்கு, காலம், கட்டுப்படியான வைப்புத் தொகை என்பவற்றுக்மைய உங்களுடைய முதலீட்டுத் திட்டத்தை நீங்களே அமைத்துக்கொள்ளும் நெகிழ்வுத்தன்மை ஏராளமான முதலீட்டுத் திட்டங்கள் கவர்ச்சிகரமான வட்டி வீதம் தற்போதுள்ள வட்டி வீதங்களை https://www.boc.lk/ratestariff#rupee-deposit-rates என்ற இணைப்பிற் சென்று பார்வையிடவும் வைப்பிலிடத் தவறினாலும் தண்டப்பணம் அறவிடப்படாது டிஜிற்றல் சாதனங்களூடாக கணக்கைக் கண்காணிக்கும் வசதி	**ஆரம்ப வைப்பு –** வாடிக்கையாளர் தெரிவுசெய்யும் முதலீட்டுத் திட்டத்தைப் பொறுத்தது **கணக்கைப் பராமரித்தலும் பிற கட்டணங்களும்** கட்டணத் தொகைகளை அறிந்து கொள்ள https://www.boc.lk/rates-tariff#general-tariff என்ற இணைப்பிற்குள் செல்லுங்கள் **வரிகள் –** வட்டியானது இலங்கை அரசாங்கத்தால் மற்றும்/அல்லது கட்டுப்பாட்டு அதிகாரசபையால் அல்லது வங்கியால் காலத்துக்குக் காலம் தேவைப்படுத்தப்படும் முற்பண வருமான வரி, பிற வரிகள், அறவீடுகள் (ஏதும் இருந்தால்), சட்டரீதியான வரிகள் என்பவற்றுக்கு உட்பட்டவையாகும்.	✓ இலங்கையை வதிவிடமாகக் கொண்ட 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதினர் ✓ வெளிநாட்டில் பணிபுரியும் (புலம்பெயர்ந்தோர் தவிர்ந்த) இலங்கையில் வதியாத 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதினர் ✓ ஆரம்ப நிதியிடலின் பொருட்டும் முதிர்வின் போதான வட்டி வருமானங்களை அனுப்பும் பொருட்டும் வங்கியில் இலங்கை ரூபாயிலான சேமிப்பு அல்லது நடைமுறைக் கணக்கொன்றை (மூலக் கணக்கு) பேணுவது அவசியமாகும். ✓ இக்கணக்குகள் முதிர்வின்போது தன்னியக்கமாக மூடப்படுவதுடன் நிதிகள் மூலக் கணக்குக்கு மாற்றப்படுகின்றன. ✓ வதிவுள்ளோர் வதிவிலார் என்ற வகுதிகளுக்குள் ஒரே வகுதியைச் சேர்ந்தோர் கூட்டுக் கணக்குகளையும் ஆரம்பிக்கலாம் **கணக்கைத் திறப்பதற்கான நடைமுறைகள்** ✓ விரும்பிய இலக்கை (முதிர்வுத் தொகை) அடைவதற்குத் தேவையான மாதாந்தக் கட்டணத்தை / முழுக் கொடுப்பனவை கணிப்பதற்கு இலங்கை வங்கி இணையத் தளத்திலுள்ள ***'BOC Flexi Investor கணிப்பானை'*** பயன்படுத்தவும். ✓ கணக்குத் திறக்கும் கோரிக்கைகள் இலங்கை வங்கி இணையத் தளத்திலுள்ள ***'இணையவழி விண்ணப்பிக்கவும்'*** என்ற பகுதியினூடாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் BOC Flexi Investor கணக்கினைத் திறக்கும் விண்ணப்பம். **தேவையான ஆவணங்கள்**; **வதிவுள்ளோருக்கு** ✓ தேசிய அடையாள அட்டையின் பிரதி ✓ முகவரியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் (தேசிய அடையாள அட்டையிலுள்ள முகவரியும் தற்போது வசிக்கும் முகவரியும் வேறு வேறு எனின் மாத்திரம்) **வதிவற்றோருக்கு** ✓ விண்ணப்பதாரியின் கடவுச்சீட்டின் சுயவிபரப் பக்கத்தின் பிரதி	நிலையான வட்டி வீதத்தின்கீழ் திறக்கப்பட்ட கணக்குகளுக்கு மாத்திரமே திரண்ட வைப்பு மீதிக்கு எதிரான முற்பணங்கள் வழங்கப்படும். இக்கணக்குடன் தொடர்புபட்ட அனைத்து விதிகள், நிபந்தனைகளையும் பற்றி அறிய கணக்குத் திறக்கும் படிவத்தைப் பார்க்கவும். முதிர்வுக்கு முந்திய பண மீளப்பெறலுக்கு சாதாரண சேமிப்பு வட்டி வீதம் வழங்கப்படும்.

			✓ தொழிலை உறுதிப்படுத்துவதற்கான செல்லுபடியான வீசாவின் அல்லது சான்றாவணங்களின் பிரதி விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள முகவரியில் இருந்து கணக்குத் திறக்கப்படும் கிளை தொலை தூரத்தில் அமைந்திருந்தால் அக்கிளையில் கணக்குத் திறப்பதற்கான வலிதான காரணங்கள்.	

காப்புறுதி வைப்பு / அங்கீகரிக்கப்படாத (தவறுதலான) கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் / செயற்படாக் கணக்குகள்

- வைப்பாளர் ஒருவருக்கு அதிகபட்சம் 1,100,000 ரூபாய் வரையிலான நட்ட ஈட்டுக்கான பொருந்தக்கூடிய காப்புறுதியை செலுத்துவதன் மூலம் நாணயச் சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் வைப்புப் பொறுப்புகள் காப்புறுதி செய்யப்பட்டுள்ளன.
- அங்கீகரிக்கப்படாத/தவறுதலான பரிவர்த்தனை ஒன்று கண்டறியப்பட்டால், அதனை உடனடியாக வங்கிக்கு அல்லது கணக்குப் பேணப்படும் கிளைக்குத் தெரிவிக்க வேண்டும்.
- ஒரு (01) வருட காலத்திற்கு பணம் மீளப்பெறல்/கொடுப்பனவு செயற்பாடுகள் எதுவுமின்றி கணக்கு செயற்படுத்தப்படாமல் இருந்தால், ஒரு வருட முடிவில் குறித்த கணக்கு 'செயலற்ற' கணக்காக மாறும்.
- இவ்வாறான கணக்குகள் 10 வருடங்களுக்கு மேலாக செயற்படுத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் இல்லை என்றால், அந்த கணக்குகளில் உள்ள நிதி கைவிடப்பட்ட சொத்தாக கருதப்பட்டு இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பப்படும்.

உங்களுடைய பின்னூட்டங்களை எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

- பின்வரும் வழிகள் மூலம் வாடிக்கையாளர்கள் தங்கள் பின்னூட்டங்களையும் முறைப்பாடுகளையும் பகிர்ந்து கொள்ளலாம்;
- எங்கள் வாடிக்கையாளர் அனுபவ முகமைத்துவப் பிரிவு மூலம் உங்கள் பாராட்டுகள் / முறைப்பாடுகள் என்பவற்றை நீங்கள் பதிவு செய்யலாம். தானியங்கு அமைப்பு மூலம் உங்கள் கோரிக்கைகள் முன்னுரிமையுடன் கவனிக்கப்படும்.

தொலைபேசி: +94 11 220 4750 / +94 11 243 5814 தொலைநகல்: +94 11 243 5815 மின்னஞ்சல்: **bocexmgt@boc.lk** இணையத்தளம்: https://www.boc.lk

அஞ்சல்: வாடிக்கையாளர் அனுபவ முகாமையாளர், 22ஆவது மாடி, இலங்கை வங்கிக் கோபுரம், இலங்கை வங்கிச் சதுக்கம், இல. 1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.

எங்கள் கிளைகள், சேவைப் பிரிவு அல்லது அழைப்பு மையத்தைத் தொடர்பு கொள்ளுங்கள், எங்கள் கணக்குகள் அல்லது சேவைகள் தொடர்பான ஏதேனும் கருத்துகள்/சந்தேகங்கள் இருப்பின் எங்கள் கிளைகளை நாடலாம் அல்லது 1975 என்ற எண்ணின் ஊடாக அழைப்பு மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.